# ஓரின உறவு குறித்த சிங்கப்பூரர்களின் மனப்போக்கு மாறிவருகிறது - கொள்கை ஆய்வுக் கழக ஆய்வு

***Mediacorp Tamil Seithi,*** 02 May 2019

(வாசிப்பு நேரம்: 1 நிமிடம்)

ஓரின உறவு கொள்வோரின் உரிமைகள் குறித்த அம்சங்களின் தொடர்பில் சிங்கப்பூரர்களிடையே கணிசமான மனமாற்றம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, 18 முதல் 25 வயதுக்கு உட்பட்ட இளையர்களிடம் அத்தகைய மனப்போக்கு தென்பட்டதாகக் கொள்கை ஆய்வுக் கழகம் தெரிவித்தது.

65உம் அதற்கும் மேற்பட்ட வயதுடைய மூத்தோரைக் காட்டிலும் அந்த வயதுடைய இளையர்கள், நன்னெறி விவகாரங்களில் தாராளமான மனப்போக்கைக் கொண்டிருப்பதும் அதன் அண்மைக் கருத்தாய்வில் தெரியவந்தது.

கருத்தாய்வு விவரங்கள்:

ஆய்வுக் காலம்: ஆகஸ்ட் 2018 - ஜனவரி 2019

கலந்துகொண்டோர்: சிங்கப்பூரர்கள் / நிரந்தரவாசிகள் - 4,015

இனம், சமயம், வயது ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு, ஆய்வு முடிவுகள் ஆராயப்பட்டன.

- ஓரினப் பாலுறவு

- மணவிலக்கு

- சூதாட்டம்

- கருக்கலைப்பு

- திருமணத்துக்கு முந்திய பாலுறவு

- திருமணத்துக்கு முன் எதிர்ப் பாலினத்தவருடன் சேர்ந்து வாழ்தல்

- திருமண உறவுக்கு வெளியே கருத்தரித்தல்

- பேச்சுச் சுதந்திரம்

- அவரவர் வாழ்க்கைக்கு சொந்தமாகப் பொறுப்பேற்றல் அல்லது அரசாங்கத்தைச் சார்ந்திருத்தல்...

போன்ற அம்சங்களின் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்பட்டன.

தற்போதைய நிலை நீடித்தால், வருங்காலத்தில் ஓரின உறவில் ஈடுபடுவோருக்கான உரிமைகளுக்குக் கூடுதல் அங்கீகாரம் கிட்டுமென ஆய்வு குறிப்பிட்டது.